ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகம்

## இரண்டாம் வகுப்பு

**(மூன்றாம் பருவம்)**

ஆசிரியர்

**குரும்பை உலகநாதன்**

மற்றும் ஆசிரியர் குழு

அட்டைப் படம் மற்றும் புத்தக வடிவமைப்பு

**V.ஜெகந்நாதன்**

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்

எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்

48/40, வடக்குச் சித்திரை வீதி, மதுரை – 625001

சென்னை மதுரை கோவை

© உரிமை பதிப்பாளருக்கே செந்தமிழ் வாசகம்
பதிப்பாளர் : ஜெஸ்ஸி பப்ளிகேஷன்ஸ்
நான்காம் பதிப்பு : 2023 (புதிய பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)
பாடநூல் தொகுப்பு : குரும்பை உலகநாதன்

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே !

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே !! வாழ்த்துதுமே !!!

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

“நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்” என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

“ஒருபோதும் வன்முறையை நாடேன், என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் – பொருளாதார குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்” என்றும், நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# முகவுரை



"செந்தமிழ் வாசகம்" என்னும் இவ்வரிய நூல் பள்ளிச்சிறார்களின் அழகிய கரங்களில் தவழப்போவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய குழந்தைகளின் பன்முக ஆற்றல்களான உணரல், படித்தல், பேசுதல், எழுதுதல், வரைதல், வண்ணமிடுதல், கற்பனைத்திறன் வளர்த்தல், பாடுதல், ஆடுதல் போன்றவற்றை வளர்ப்பதில் இந்நூல் உறுதுணை புரியும் என்று நம்புகிறோம்.

சின்னஞ்சிறு மழலைச் செல்வங்கள் சிந்தை மகிழப் படிக்கும் வகையில் அழகாகவும் அற்புதமாகவும் அமைந்துள்ளது, இந்த "செந்தமிழ் வாசகம்". தமிழை, தமிழ்ச்சொற்களை எளியமுறையில் அறியவும், எழுதவும் ஏற்ற முறையில் எளிமையும் இனிமையும் பொருந்திய வார்த்தைகளைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. சொற்களின் பொருளை விளக்குவதற்கு ஆங்காங்கே அழகிய படங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அறநெறியைப் போதிக்கும் வண்ணம் அற்புதமான சிறுசிறு பாடல் தொகுப்பினையும், நீதிக்கதைகளையும் ஆங்காங்கே ஆசிரியர் கையாண்டுள்ளது குழந்தைகளின் படிப்பாற்றலை ஊக்குவிக்கும். கதை, கவிதைகளின் மூலம் சிறந்த வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளும் நீதிகளும் உணர்த்தப்பட்டுள்ளன. பாடத்துடன் இணைந்த பயிற்சிகள் குழந்தைகளின் புரிதல் திறனைக் கண்டறியும் வண்ணம் அமைந்துள்ளன. அரசு கல்வித்துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு ("CCE METHOD") நவீனப்படுத்தப்பட்ட கல்விமுறையைக் கையாண்டுள்ளது, நற்பயனை நல்க வல்லது.

குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வகையில், நல்ல சந்தத்துடன் கூடிய வெல்லத்தமிழ்ப் பாடல்களும், குழந்தைகளின் படிக்கும் வேட்கையை நன்கு தூண்டும் வண்ணம் அமையப்பெற்றுள்ளன.

இத்தகைய சீரிய எங்கள் முயற்சியினைப் பெற்றோர்களும், ஆசிரியப் பெருமக்களும் அங்கீகரித்து, தமிழ்மொழியினைப் பயிலும் மாணவச் செல்வங்களும் இந்நூலை நல்லதொரு வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். இப்புத்தகத்தின் நிறைகுறைகளை எங்களுடன் பகிர்ந்துக் கொள்ளத் தமிழ்கூறும் நல்லுலகோரை அன்புடன் வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்

# ஆசிரியர்க்கு



" வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம்
வேரூன்றிய நாள் முதல் உயிர்மொழி "

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

எந்தக் கருத்தையும் கேட்பவர் மனங்கொள்ளும் அளவு பாடலாக, இசையாக, செய்தியாக, கதையாக, புனைந்து கூறும் அளவிற்கான மொழித்திறனை கற்றல் மூலம் குழந்தைகளிடம் உருவாக்கும் வகையில் எமது இப்புத்தகம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

### 1. என் நினைவில் :



முன் பருவத்தில் பயின்ற அனைத்து திறன்களையும் நினைவு கூர்ந்து அவற்றை இப்பருவப் பாடங்களோடு தொடர்புபடுத்தி கற்பதற்கான நினைவு கூறும் செயல்கள் இச்செயல்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்திருப்பது இவற்றின் சிறப்பு.



2. மாணவர்களின் முழுமையான மொழி ஆளுமைத்திறன் அவர்களின் பேச்சு மூலமாகவே முதலில் வெளிப்படும், பேசுதல் திறனை அதிகரிக்க உரையாடல் வடிவ நிகழ்வகள் தரப்பட்டுள்ளன.



3. சொற்கள், தொடர்கள் என வரிசையாக படித்து அதிலுள்ள பொருள் மற்றும் செய்தியைப் பற்றிய விழிப்புணர்வு பெற உதவும் வகையில் சிறு சிறு தொடர்களாக செய்திகள் தொகுத்து கொடுக்கப்பட்டுள்ளன.



4. செய்யுள் என்பது படிப்பதற்கு சுமையாக இல்லாமல் சுலபமாக புரியும் வகையில் ஆத்திசூடி படக்கதைகளாகவே தெளிவாக அழகாக கொடுக்கப்பட்டுள்ளது.



5. மனதை ஒருமுகப்படுத்த கதைகள் குழந்தைகளை பெரிதும் ஈர்க்கின்றன. வெறும் படக்கதைகள் அவர்களாகவே கதையை கற்பனையுடன் கூற வழி வகுக்கும் அளவில் கொடுக்கப்பட்டுள்ளது. பின்னர் சொற்கள, தொடர்கள், உரையாடலுடன் கூடிய படக்கதைகள் ஆகியவை தொடக்க நிலையில் குழந்தைகளின் படித்தல் வேகத்தை அதிகரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது சிறப்பு.



6. எளிய சொற்கள், சிறு சிறு தொடர்கள் ஆகியவற்றை தாமாகவே சொந்தமாக பேச, எழுத மாணவர்கள் விருப்பமுடன் முன்வரும் வகையில் இப்பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.



7. விடுகதைகளுக்கான விடைகளைக் கண்டறிவதிலும், புதிர்களை விடுவிப்பதிலும் மாணவர்களின் ஆர்வம் அளவிட முடியாதது ஆகும். இந்த ஆர்வத்தை நம் கற்றலுக்கு பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும், அவர்களின் நுண்ணுணர்வுகளை தூண்டும் வகையிலுமாக விடுகதைகளும், புதிர்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன.



8. மாணவர்கள் எதுவுமே புரியாமல் வெறும் மனப்பாடம் செய்து தேர்வில் எழுதுவதை தவிர்த்து ஒவ்வொன்றையும் தானாகவே செயல்பாடுகளின் மூலமாகவே கற்றுத் தெளிந்து அவர்களாகவே கேள்வி கேட்க, விடைகளை ஆராய்ந்து அறிய, உணர்வு மற்றும் பிரச்சனைகளை தயக்கமின்றி தெரிவிக்க உதவும் வகையிலான பயிற்சிகள் தரப்பட்டுள்ளது மிக சிறப்பு ஆகும்.



ஒவ்வொரு குழந்தையும் சான்றிதழ் தரப்படாத அறிவியல் அறிஞர் எனக் கூறினால் மிகையாகாது. தமக்குத் தோன்றும் புதுமையான கருத்துக்குச் செயல்வடிவம் கொடுத்து சோதித்துப் பார்ப்பதில் குழந்தைளுக்கு நிகர் அவர்களே ஆவர்.



ஒவ்வொரு குழந்தையும் தனித்திறமையுடையவர். ஆற்றலின் ஊற்று அவர்களுக்குள்ளேயே இருக்கிறது. அவர்களை ஊக்குவித்து ஆசிரியர் கை கொடுத்தால் மட்டுமே அவ்வூற்று மேலும் சுரக்கும்.

இப்புனிதமான பணிக்கு ஒரு சிறப்பு உதவியாக எமது இப்புத்தகம் நிச்சயம் பயணப்படும் என்பதில் ஐயமில்லை.

வகுப்பறை வண்ணமயமாகட்டும்.

குழந்தைகள் குதூகலமாகட்டும்.

# பொருளடக்கம்


| வ. எண் | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | என் நினைவில் | 7 |
| 2. | யாரு? யாரு? யாரு? | 12 |
| 3. | சிறிய உருவம்! பெரிய உலகம்! | 16 |
| 4. | விரும்பி வேலை செய்யலாம் | 20 |
| 5. | நாங்கள் நண்பர்கள் | 23 |
| 6. | பயணம் | 28 |
| 7. | கடற்கரைக்குப் போகலாம் | 33 |
| 8. | தொடர்வண்டி நிலையத்தில் | 36 |
| 9. | அன்றும் இன்றும் | 41 |
| 10. | படவிளக்க அகராதி | 48 |
| 11. | கொன்றை வேந்தன் | 50 |
| 12. | மொழியோடு விளையாடு | 51 |
| 13. | தமிழ்ச்சொல் அறிந்து பயன்படுத்துவோம் | 52 |
| 14. | வந்த பாதை | 53 |

# 1. என் நினைவில் எப்படி உதவலாம்?



குட்டி எலி வெளியே வருவதற்கு இவற்றுள் எந்த வழியில் உதவலாம்? ✓ செய்க







வேறு எப்படி உதவலாம்? கலந்துரையாடுக.





## விந்தை மனிதர்

பூசணிக்காய் தலையிலே
பச்சை மிளகாய் மூக்குதான்!
திராட்சை இரண்டு கண்களாம்
தக்காளிப்பழ வாய்தானாம்

பரங்கிக்காய் உடம்பிலே
புடலை இரண்டு கைகளாம்
வெண்டைக் காய்கள் விரல்களாம்
வெள்ளரிக்காய் கால்களாம்

காயும் பழமும் மனிதர்போல்
காண அழகு பாருங்கள்
நடனம் ஆடப் போகிறார்
நாமும் காண்போம் வாருங்கள்

**பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க - பாடி மகிழ்க.**







## சொற்களை இணைத்துப் படி.

கடல், மயில், கொலுசு,
மல்லிகை, மீன்கள்,
நிலா, யானை, மண்

| | | |
|---|---|---|
| | | |
| தட்டு | வெள்ளி | |

| | | |
|---|---|---|
| | | |
| கோலம் | வண்ண | |

| | | |
|---|---|---|
| | வாசனை | திரவியம் |
| | | |

| | | |
|---|---|---|
| | பெரிய | |
| | கப்பல் | |



பர்வீன்,
ஜா, ஹா, ஷா, ஸா, ஸ்ரீ
ஆகிய வரிசை
எழுத்துகளைக்
கொண்ட தன்
நண்பர்களின் பெயரை
எழுதுகிறாள்.

ரோஜா
ஹாஸ்யா
ஆயிஷா
ஸாம்பவி
ஸ்ரீஷா
ஸ்ராதா

நீங்களும்
எழுதலாமே!

## யார் அவர்?



அம்மா.. நான் ஒருவரைப் பார்த்தேன்
அப்படியா? யார் அவர்?
அவர் ஒரு பாம்பைக் கையால் பிடித்தார்
ஓ..! அப்படியா?




பெரிய யானையையே அதன் வாலைப் பிடித்து தூக்கி விட்டார்.
என்னது யானையையா?




புலியையே காலால் மிதித்தார் அம்மா
என்னது, புலியை மிதித்தாரா?


அதுமட்டுமா! காட்டு ராஜாவான சிங்கத்தின் காலைப் பிடித்துச் சுழற்றினார்
நானும் அவரைப் பார்க்க வேண்டுமே!


இதோ... இவர்தான் அம்மா அவர்
அட செல்லமே! என்னை எப்படி ஏமாற்றிவிட்டாய்.









## 2. யாரு?யாரு?யாரு?

கத்தரிக்காய்க்குக்
குடைபிடிக்கக்
கற்றுக்கொடுத்தது யாரு?

அந்தக் கடலைக்கொட்டைக்கு
முத்துச் சிப்பிபோல
மூடிவச்சது யாரு?



பருத்திச்செடிக்குப்
பஞ்சு மிட்டாயைத்
தின்னக்கொடுத்தது யாரு?

அந்த வாசனையில்லாக்
காகிதப் பூவுக்கு
வண்ணமடிச்சது யாரு?

ஆலமரத்துக்கு
அத்தனை ஊஞ்சலை
ஆடக்கொடுத்தது யாரு?



அந்தத் தொட்டாசிணுங்கி
பட்டுன்னு மூடிக்கக்
கட்டளை போட்டது யாரு?

யாரு?யாரு?கூறு
அந்த இயற்கை
அன்னையாம் பாரு

- வையம்பட்டி முத்துசாமி

**பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க - பாடி மகிழ்க.**

## பயிற்சி

### படித்துப் பழகுக

கற்றுக்கொடுத்தது

மூடிவச்சது

தின்னக் கொடுத்தது

வண்ணமடிச்சது

ஆடக் கொடுத்தது

கட்டளை போட்டது

இயற்கை அன்னை

### படித்தும் எழுதியும் பழகுக

கத்தரிக்காய்

கடலைக்கொட்டை

முத்துச்சிப்பி

பருத்திச்செடி

பஞ்சுமிட்டாய்

காகிதப்பூ

தொட்டாசிணுங்கி

### பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. கத்தரிக்காய் | - | முத்துச்சிப்பி |
| 2. கடலைக்கொட்டை | - | ஊஞ்சல் |
| 3. பருத்திச்செடி | - | வண்ணம் |
| 4. ஆலமரம் | - | பஞ்சுமிட்டாய் |
| 5. காகிதப்பூ | - | குடை |

### கலந்துரையாடுக

இப்பாடலில் உனக்குப் பிடித்த வரிகள் எவை? ஏன்?

# நம்மைச் சுற்றி...



தூங்குமூஞ்சி
மரத்தின் இலைகள்
காலையில் எப்படி
இருக்கும்? மாலையில்
எப்படி இருக்கும்?





பட்டாசுக்காயைத்
தண்ணீரில் போட்டால்
நடப்பது என்ன?





பூத்திருக்கும் சூரியகாந்திப்பூக்கள்
சூரியன் உதித்ததும்
என்ன செய்யும்?



பலமுறை சொல்லிப்பார். கிடைக்கும் சொல்லை எழுதுக.

| | |
|---|---|
| மரஆலம் | |
| த்திபரு | |
| சல்ஊஞ் | |
| பிசிப் | |
| னைவாச | |

## வாசித்துப் பழகு

| ஒருமை | பன்மை |
|---|---|
| நாய் | நாய்கள் |
| நான் | நாங்கள் |
| மாதம் | மாதங்கள் |
| நாள் | நாட்கள் |
| காகம் | காகங்கள் |
| பழம் | பழங்கள் |

அ. சொற்களைப் படித்து ஒருமை, பன்மைக்குரிய கட்டத்தில் எழுதுக.
(மான், சிங்கங்கள், கோழிகள், முயல், புலி, கரடிகள், வாத்து, மீன்கள்)

| ஒன்று | பல |
|---|---|
| | |
| | |
| | |
| | |

ஆ. ஒருமைக்குரிய பன்மைச் சொற்களையும், பன்மைக்குரிய ஒருமைச் சொற்களையும் கட்டத்தில் எழுதுக.

| ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
|---|---|---|---|
| கொடி | | | பசுக்கள் |
| பை | | | எறும்புகள் |
| ஈ | | | கொசுக்கள் |
| வளையல் | | | பழங்கள் |
| பேருந்து | | | குருவிகள் |
| குதிரை | | | நட்சத்திரங்கள் |
| நாய் | | | ஆமைகள் |
| கரண்டி | | | கொக்குகள் |

# 3. சிறிய உருவம், பெரிய உலகம்!



"ஓ! குட்டி எறும்பே!
நீ! உன்னை விடப் பெரிய
கனியை எப்படித் தூக்கிச்
செல்கிறாய்?

அடடே! என்ன அவசரம்,
பார்த்துக்கொண்டு இருக்கும்போதே
உள்ளே சென்றுவிட்டாயே!

நானும் உன்னைப்போல்
சிறியதாக இருந்தால்
உன்னைத் தொடர்ந்து வந்திருப்பேனே",
என்றாள் கோமதி.

சட்டென்று அவளுடைய
உடல் அதிர்ந்தது. அவள்
உருவம் சிறியதாகியது.
சுற்றிலும் பார்த்தாள்.
எறும்பின் அளவுக்குத்
தானும் சிறியதாகி
இருப்பதைக்கண்டு
வியப்படைந்தாள்.



எறும்பு நுழைந்த புற்றுக்குள் இறங்க
முயற்சி செய்தாள். தடுமாறி
பொத்தென்று புற்றுக்குள் விழுந்தாள்.



அடேயப்பா! "எத்தனை அறைகள்
இந்தப்புற்றுக்குள் அத்தனையிலும்
எவ்வளவு சேமிப்பு"? வியக்க வைக்கிறதே!

வியப்பு குறையாமல் புற்றுக்கு வெளியே
வந்தாள். அருகிலிருந்த மரத்தடியில்
அமர்ந்தாள்.

மரத்தின் மேலே
தேன்கூடு இருந்தது.

"தேனீக்கள் எப்படி
கூடு கட்டுகின்றன?
தேனைச் சிந்தாமல்
எப்படிச் சேமிக்கின்றன?

அதைப் பார்க்க வேண்டுமே"
என்று நினைத்தாள் கோமதி.



உடனே அவளுக்குச்
சிறகுகள் முளைத்தன.

"ஊ ஊ ய்ய்" மகிழ்ச்சியில் கத்தினாள்.
பறந்து சென்று தேன்கூட்டுக்குள் புகுந்தாள்.



பலவகை தேனீக்களை
ஆர்வமாகப் பார்த்தாள்.

இவ்வளவு சிறிய தேனீ.
இத்தனை வேலைகள்
செய்கிறதா? என்ன அற்புதம்!

தேன்கூட்டைவிட்டு வரவே
மனமில்லை. தயங்கியபடியே
வெளியே வந்தாள்.

மரக்கிளையில் அமர்ந்தாள்.
கீழே அழகான நீரோடை.
அதில் மீன்கள் நீந்துவதைப்
பார்த்தாள்.

மீன்களைப் போல தானும்
நீந்த வேண்டுமென்று ஆசை
வந்தது.



**அடுத்து என்ன நடந்திருக்கும்? கதையைத் தொடர்ந்து கூறுக.**

## பயிற்சி

**படித்துப் பழகுக**

உடல் அதிர்ந்தது | மரத்தடியில்

தடுமாறினாள் | சட்டென்று | கத்திக்கொண்டு

வியந்தவாறு | தேனீக்கள்

**எழுதிப் பழகுக.**

எறும்புப்புற்று | தேன்கூடு

சிறகுகள் | மரக்கிளை | நீரோடை

**பொருத்தமான குறியிடுக - சரி ✓ தவறு ✗**

1. எறும்புப்புற்று பெரியதாக வளர்ந்தது. ☐
2. கோமதி எறும்பாக மாறிவிட்டாள். ☐
3. நீரோடையில் வாத்துகள் நீந்துவதைப் பார்த்தாள். ☐
4. நீரில் நீந்த வேண்டும் என்று கோமதி நினைத்தாள். ☐
5. கோமதி மரத்தடியில் அமர்ந்தாள். ☐

**வாய்மொழி விடை தருக.**

1. கோமதி எங்கெங்கே சென்றாள்? என்னவெல்லாம் பார்த்தாள்?
2. கோமதிக்கு என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டன?
3. கோமதியைப் போல உனக்கு எங்கெல்லாம் சென்று பார்க்க ஆசை?

**விடை எழுதுக.**

1. கோமதி எங்கெங்கே சென்றாள்?

## படங்களைத் தொடர்புப்படுத்திக் கதை உருவாக்குக







## கதையைக் கேட்டு முடிவை மாற்றிக் கூறுக






# 4. விரும்பி வேலை செய்யலாம்








வீட்டில் வேலை செய்யலாம்
   விரும்பி நாமும் செய்யலாம்
படுக்கை சுருட்டி வைக்கலாம்
   தரையைக் கூட்டிப் பெருக்கலாம்

உண்ணும் தட்டைக் கழுவலாம்
   உடுத்தும் உடைகள் மடிக்கலாம்
கடையில் பொருள்கள் வாங்கலாம்
   செடிகள் நட்டு வளர்க்கலாம்

இந்த வேலை பெரிதென
   ஏற்றத்தாழ்வு இல்லையே!
எந்த வேலை ஆயினும்
   எல்லாருமே செய்வோமே!







பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க - பாடி மகிழ்க.

## பயிற்சி

படித்துப் பழகுக

செய்யலாம் பெருக்கலாம்

கழுவலாம் மடிக்கலாம் வாங்கலாம்

வளர்க்கலாம் வைக்கலாம்

படித்தும் எழுதியும் பழகுக

| | | |
|---|---|---|
| வீடு | வேலை | செடிகள் |
| தரை | உடை | கடை |
| தண்ணீர் | படுக்கை | ஏற்றத்தாழ்வு |

பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. படுக்கை | - | மடிக்கலாம் |
| 2. உடுத்தும் உடைகள் | - | நட்டு வளர்க்கலாம் |
| 3. கடையில் | - | சுருட்டி வைக்கலாம் |
| 4. உண்ணும் தட்டை | - | பொருள்கள் வாங்கலாம் |
| 5. செடிகள் | - | கழுவலாம் |

# இவர்களைத் தெரியுமா?

## விண்வெளியை அடைந்தவர்கள்



ராகேஷ் ஷர்மா



கல்பனா சாவ்லா

## பளு தூக்கும் வீரர்கள்



மல்லேஸ்வரி



ஜெரிமி

## சிகரம் தொட்டவர்கள்



ஹிலாரி, நார்கே



பச்சேந்திரி பால்

## சமையல் கலைஞர்கள்



மஸ்தானம்மா



தாமோதரன்

**ஆணின் வேலைகள், பெண்ணின் வேலைகள் என்று தனித்தனியே உள்ளனவா?**

### படத்திற்குரிய செயலை எழுதுக



நீந்துகிறான்











# 5. நாங்கள் நண்பர்கள்



## அகிலன்

கபடி ஆடப் பிடிக்கும்

கிளி வளர்க்கிறான். அதனுடன் விளையாடி மகிழ்வான்.

புத்தகம் படிப்பதில் ஆர்வம் அதிகம்.

வானவில்லைத் தொட்டுவிட்டதாகக் கூறுவான். அதை வரைந்து பார்த்து மகிழ்வான்.

எளிதில் நட்புக்கொள்வான்

காய்கனிகளை விரும்பிச் சாப்பிடுவான்.



## செல்வி

எந்தப் புதிருக்கும் எளிதில் விடை சொல்வாள்.

மனதில் பட்டதை வெளிப்படையாக பேசுவாள். பயப்படமாட்டாள்.

நகைச்சுவை கதைகளை விரும்பிப் படிப்பாள்.

மீன்கள் வளர்க்கிறாள். அவை நீந்துவதைப் பார்த்து மகிழ்வாள்.

தேனும் தினைமாவும் விருப்பமான உணவு.

இரவில் நிலாவைப் பார்த்து உண்ணுவது பிடிக்கும்.




**இவர்கள் மூவரும் நண்பர்கள். எப்போதும் ஒன்றாகவே இருப்பார்கள்.**

**உங்கள் நண்பர்களைப் பற்றி நீங்களும் கூறலாமே!**

அறிமுகம் இல்லாத யாரேனும் பிடித்த பொருளைக் கொடுத்து தன்னுடன் வருமாறு அழைத்தால்...




**இந்தச் சூழலில் நீ என்ன செய்வாய்?**

## பயிற்சி

படித்துப் பழகுக

| | |
|---|---|
| புதிர்க்கதைகள் | நண்பர்கள் |

| | | |
|---|---|---|
| சித்திரக்கதைகள் | உறவினர்கள் | உருவங்கள் |

| | |
|---|---|
| வண்ணப்பூக்கள் | மேகங்கள் |

எழுதிப் பழகுக.

| | | |
|---|---|---|
| புதிர்க்கதைகள் | ஆர்வம் | நட்சத்திரங்கள் |
| இனிப்புப்பண்டம் | பூச்செடிகள் | திரைப்படம் |

பொருத்தமான குறியிடுக - சரி ✓ தவறு ✗

1. ஜெகனுக்கு வம்புப் பேச்சுகள் பிடிக்கும். ☐
2. அகிலனுக்குத் திரைப்படங்கள் பார்ப்பதில் ஆர்வம் அதிகம். ☐
3. செல்வி தயக்கமின்றிப் பேசுவாள். ☐
4. ஜெகன், அகிலன், செல்வி ஆகிய மூவரும் உடன்பிறந்தவர்கள். ☐

வாய்மொழி விடை தருக.

1. அகிலன், ஜெகன், செல்வியிடம் உனக்குப் பிடித்தவை என்னென்ன?

விடை எழுதுக.

1. நண்பர்கள் மூவரில் உனக்குப் பிடித்தவர் யார்? ஏன்?

தாமரை இந்தப் புதிருக்கு விடை கண்டுபிடித்துவிட்டாள். நீங்களும் கண்டுபிடித்துப் பொருத்துங்கள்.

| | |
|---|---|
| தட...தட... |  |
| டிரிங்...டிரிங்... |  |
| பாம்...பாம்... |  |
| பட்...பட்... |  |

எந்த எழுத்தை
கண்ணனிடம்
கூறினாலும்
உடனடியாக
அந்த எழுத்தில்
தொடங்கும் பல
சொற்களைச்
சொல்லிவிடுவான்.
நீங்களும் விளையாடி
மகிழுங்கள்




இந்தப் படங்கள் ஜெயந்திரன் வரைந்தவை.
உங்களுக்குப் பிடித்ததை நீங்களும் வரையுங்கள்.



அ. கால்ச்சுவடுகளைக் கண்டுபிடித்து உருவத்துடன் பொருத்துக.



ஆ. காய்களின் பெயரை எழுதி, வண்ணம் தீட்டுக.





____________________

____________________





____________________

____________________

# 6. பயணம்

குட்டிப்பையன் சிம்பு குளிக்கப் போனான். குழாயைத் திறந்தான்.தண்ணீர் குபு....குபுவென வந்தது.



'குளிக்கப் போறேன் - நான்

குளிக்கப் போறேன்

அழுக்குப்போக நல்லா

குளிக்கப் போறேன்'.

எனப் பாட்டுப் பாடியபடி வழலைக் கட்டியைக் குழைத்தான்.

'குமிழி வந்தேன்

வண்ணக்குமிழி வந்தேன்.

கைப்பட்டாலே உடையும்

வண்ணக்குமிழி

சிம்புவின் கைகளில் வந்தேன்'.



சிம்புவின் கையிலிருந்து பாட்டுச் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் தன் கையைப் பார்த்தான். கை, கால்கள் முளைத்த வண்ணக்குமிழி ஒன்று அவன் கையில் இருந்தது. சிம்புவைப் பார்த்துக் குதூகலமாகச் சிரித்தது. அதனைத் தொட்டுப் பார்க்க ஆர்வத்துடன் விரலை நீட்டினான். "ஆ! நீ தொட்டால் நான் உடைந்து விடுவேனே", என்றது குமிழி. சிம்பு சிரித்தபடி தலையை ஆட்டினான்.

மெல்ல, தன் முகத்தைத் தேய்த்தான். குமிழி, சிம்புவின் நெற்றியில் நடந்தபடி,



'நடந்து வந்தேன் - நான்

நடந்து வந்தேன்

சிம்புவின் நெற்றியில்

நடந்து வந்தேன்'

என்று பாடியது.

பாடலைக் கேட்டுப் புன்னகைத்தான் சிம்பு, மீண்டும் தேய்க்கத் தொடங்கினான்.

'சறுக்கி வந்தேன் - நான்
சறுக்கி வந்தேன்
சிம்புவின் மூக்கின்மேல்
சறுக்கி வந்தேன்'



என்று பாடியபடி சறுக்கியது குமிழி. சிம்பு அதன் குறும்பைக் கண்டு மகிழ்ந்தான். தன் காதுகளைத் தேய்க்கத் தொடங்கினான். குமிழி, காதுகளில் வளைந்த படி.



'வளைந்து வந்தேன் - நான்
வளைந்து வந்தேன்
சிம்புவின் காதுகளில்
வளைந்து வந்தேன்'
என்று பாடியது.

" ஏய்! காதுகளில் இவ்வளவு சத்தமாய்ப் பாடாதே"! செல்லமாய் அதட்டினான் சிம்பு. "ஓ! சரி, நண்பனே!" புன்னகையுடன் தலையாட்டியது குமிழி.

தன் தோள்களைத் தேய்த்தான் சிம்பு, குமிழி, சரசரவென்று வழுக்கியபடி.

'வழுக்கி வந்தேன் - நான்
வழுக்கி வந்தேன்
சிம்புவின் தோள்களில்
வழுக்கி வந்தேன்'
என்று பாடியது.



கலகலவெனச் சிரித்தபடி சிம்பு வயிற்றைத் தேய்த்தான். கடகடவென உருண்ட குமிழி.



'உருண்டு வந்தேன் - நான்
உருண்டு வந்தேன்
சிம்புவின் வயிற்றின் மேல்
உருண்டு வந்தேன்'
என்று பாடியது.

ஓரக்கண்ணால் பார்த்தபடி தன் கால்களைத் தேய்த்தான் சிம்பு. அவன் குட்டிக் கால்களில் குடுகுடுவென ஓடி வந்த குமிழி.

'ஓடி வந்தேன் - நான்
ஓடி வந்தேன்
சிம்புவின் கால்களில்
ஓடி வந்தேன்'
என்று பாடியது.



தேய்த்து முடித்ததும் தண்ணீரைத் தன்மீது ஊற்றினான் சிம்பு.



அப்போது குமிழி
'பயணம் வந்தேன்-நான்
பயணம் வந்தேன்
தலைமுதல் கால்வரை
பயணம்வந்தேன் - சிம்புவின்
தலைமுதல் கால்வரை
பயணம் வந்தேன்'.

என்று பாடியபடியே
சிம்புக்குக் கையசைத்தது.

"நாளையும் நீ வரவேண்டும்" என்று அன்புக் கட்டளையிட்டுக் கையசைத்தான், சிம்பு. அவன் குளியலும் முடிந்தது.

## பயிற்சி

### படித்துப் பழகுக

வழுக்கி வந்தேன்

வளைந்து வந்தேன்

உருண்டு வந்தேன்

சறுக்கி வந்தேன்

ஓடி வந்தேன்

நடந்து வந்தேன்

### எழுதிப் பழகுக

வழலைக்கட்டி

குட்டிப்பையன்

வண்ணக்குமிழி

பாட்டுச்சத்தம்

பயணம்

### பொருத்துக.

வண்ணக்குமிழி,

| | | |
|---|---|---|
| 1. மூக்கில் | - | வழுக்கி வந்தது |
| 2. காதில் | - | வளைந்து வந்தது |
| 3. தோளில் | - | ஓடி வந்தது |
| 4. காலில் | - | சறுக்கி வந்தது |

### வாய்மொழி விடை தருக.

1. வண்ணக்குமிழி எவ்வாறெல்லாம் பயணம் சென்றது?

### விடை எழுதுக.

1. வண்ணக்குமிழி எங்கெங்கே பயணம் செய்தது?

குமிழி சிம்புவின் முதுகில் இருக்கிறது. என்ன பாடியிருக்கும்? எழுதுக.

........................................................................................

........................................................................................

........................................................................................

........................................................................................



ஒரு எழுத்தை நீக்கினால் உடல் உறுப்பு கிடைக்கும். கண்டுபிடித்து எழுதுக.

| | |
|---|---|
| தவலை | |
| கவண் | |
| படல் | |
| பகை | |
| சிகரம் | |
| காவல் | |

என் பாதுகாப்பு! என் கையில்!

சத்தான உணவை உண்பேன்.

நாள்தோறும் குளிப்பேன். சுத்தமாக இருப்பேன்.

சாலையில் கவனமாகச் செல்வேன்.

ஆபத்து தரும் செயல்களைச் செய்யமாட்டேன்.

என்னை எவரும் தவறாகத்தொட விடமாட்டேன்.

அன்றாடம் நடப்பதைப் பெற்றோரிடம் கூறுவேன்.



## 7. கடற்கரைக்குப் போகலாம்

கடற்கரைக்குப் போகலாம்
மணலில் வீடு கட்டலாம்
கிளிஞ்சல் சங்கு பொறுக்கலாம்
கட்டும் வீட்டில் ஒட்டலாம்

பந்தைத் தட்டி அடிக்கலாம்
நண்டைத் துரத்தி ஓடலாம்
பட்டம் விட்டுப் பார்க்கலாம்
குட்டிக்கரணம் போடலாம்

ஈர மணலில் எழுதலாம்
அழிக்கும் அலையைத் துரத்தலாம்
துள்ளித்துள்ளிக் குதிக்கலாம்
தண்ணீரிலே நனையலாம்

பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க - பாடி மகிழ்க.

## பயிற்சி

### படித்துப் பழகுக

கட்டலாம் | பொறுக்கலாம் | ஒட்டலாம்

ஓடலாம் | எழுதலாம் | குதிக்கலாம்

நனையலாம் | துரத்தலாம்

### படித்தும், எழுதியும் பழகுக.

கடற்கரை | கிளிஞ்சல் | குட்டிக்கரணம்

ஈரமணல் | அலை

### பொருத்துக

1. மணலில் வீடு - எழுதலாம்
2. அலையைத் - அடிக்கலாம்
3. பந்தைத் தட்டி - துரத்தலாம்
4. நண்டைத் துரத்தி - கட்டலாம்
5. ஈர மணலில் - ஓடலாம்

### கலந்துரையாடுக

கடற்கரைக்குச் சென்றால் என்னென்ன செய்யலாம்?

## இந்த இடங்களுக்குச் சென்றால் என்னவெல்லாம் செய்வீர்கள்?






**வண்ணம் தீட்டுக**



## 8. தொடர்வண்டி நிலையத்தில்...






படத்தைப் பார்த்துப் பேசுக.

சிறுசிறு தொடர்களை உருவாக்குக.

# செய்து பார்

டேங்ராம் சதுர அட்டை கோடிட்டபடி வெட்டி எடுக்கப்பட்ட 7 அடிப்படை வடிவங்களைக் கொண்டது. அவற்றைக் கொண்டு எண்ணற்ற உருவங்களை அமைக்க முடியும். மாதிரிக்குச் சில உருவங்கள் செய்து காண்பிக்கப்பட்டுள்ளது. அவைகளை மாதிரியாகக் கொண்டு மாணவர்களுக்குப் பலவிதமான உருவங்களைச் செய்து காண்பித்துப் பயிற்சிகளை மேற்கொள்ள ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.








## வினா கேட்கலாம்



1. நரி எங்கே நிற்கிறது?
2. மயில் என்ன செய்கிறது?
3. குரங்கு என்ன செய்கிறது?

நீங்களும் வினாக்களைக் கேளுங்கள்.

-----------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------

## குரைக்கும் நாய்



குரைக்கும் நாய் செய்க...

குரைக்கும் நாயின் உணவுக்கு வழி காட்டுக.



# 9. அன்றும் ... இன்றும் ...

தாத்தாவும் சத்யாவும் குளக்கரையில் நின்றிருந்தனர். தாத்தா குளத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தார். அவருடைய முகம் வாடி இருந்தது.



“ஏன் தாத்தா கவலையாக இருக்கிறீர்கள்?” என்று கேட்டான் சத்யா.

“இது எப்படி இருந்த குளம் தெரியுமா, சத்யா?”

“இதோ இந்தத் தார்சாலை அப்போது இல்லை. மண்சாலைதான். குளம் முழுவதும் நீர் நிரம்பி இருக்கும். 



போன்றவை தண்ணீர் குடிக்க வந்து போகும். 

குளத்தில் குளிக்கும். 

துள்ளிக் குதிக்கும்.  கூட்டம் கூட்டமாய் நீந்துவதைப் பார்க்க அழகாக இருக்கும். 

பிடிக்க  நிற்கும். குளத்தின் அருகே பெரிய 

இருக்கும். அங்கு 

கீச்சிடும். அதன் பழங்களைக் கொத்தித் தின்ன 

பறந்து வரும். இவற்றை எல்லாம் பார்க்க எவ்வளவு அழகாக இருக்கும் தெரியுமா?



"ஓ..... அப்படி இருந்த குளமா இது?" என்று வியப்புடன் கேட்டான் சத்யா.

"ஆமாம். ஆனால் இப்போதோ.... குளத்தில் எவ்வளவு குப்பைகள் பார். நீரும் வற்றி விட்டது", வருத்தத்துடன் சொன்னார் தாத்தா.

"நீங்கள் முன்பு பார்த்த அந்தக் குளத்தைப் பார்க்க எனக்கும் ஆசையாக இருக்கிறது. இதைச் சரிசெய்ய முடியாதா தாத்தா?", என்று கேட்டான் சத்யா.

"அதைப்பற்றித்தான் ஊர்த்தலைவரிடம் பேசி இருக்கிறேன். விரைவில் சரி செய்வதாகச் சொல்லியிருக்கிறார்" என்றார் தாத்தா.



பழைய குளம் சத்யாவின் மனதில் கற்பனையாக விரிந்தது. மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தபடி நடக்கத் தொடங்கினான் சத்யா.



## பயிற்சி

**படித்துப் பழகுக**

| | |
|---|---|
| கூட்டம் கூட்டமாய் | வாத்துக்கூட்டம் |

| | | |
|---|---|---|
| குருவிகள் கீச்சிடும் | வற்றிவிட்டது | வாடி இருந்தது |

| | |
|---|---|
| ஊர்த்தலைவர் | கற்பனையாக விரிந்தது |

**எழுதிப் பழகுக.**

| | | | |
|---|---|---|---|
| குளக்கரை | தண்ணீர் | தார்சாலை | மண்சாலை |
| குருவிகள் | ஊர்த்தலைவர் | கற்பனை | குப்பைகள் |

**பொருத்தமான குறியிடுக - சரி ✓ தவறு ✗**

1. தாத்தாவும் சத்யாவும் பேருந்து நிலையத்தில் நின்றிருந்தனர். ☐
2. குளத்தைக் கண்ட தாத்தாவின் முகம் மலர்ந்தது. ☐
3. மண்சாலை இப்போது தார்சாலையாக மாறியுள்ளது. ☐
4. குளத்தில் தற்போது நீர் நிரம்பியுள்ளது. ☐
5. குளத்தைச் சரிசெய்ய உதவுவதாகச் சொன்னவர் ஊர்த்தலைவர். ☐

**பொருத்துக.**









| | | | |
|---|---|---|---|
| கீச்சிடும் | துள்ளிக் குதிக்கும் | மீன் பிடிக்க நிற்கும் | பழம் தின்னப் பறந்து வரும் |

**வாய்மொழி விடை தருக.**

1. குளம் எப்படி இருந்ததாக சத்யாவிடம் தாத்தா கூறினார்?

**விடை எழுதுக.**

1. குளம் தற்போது எவ்வாறு உள்ளது?
2. குளத்தை சரிசெய்யும்படி தாத்தா யாரிடம் கூறினார்?

# இவர்கள் பேசினால் என்ன பேசுவார்கள்?












## எதிர்ச்சொல் அறிவோம்



பெரியது



சிறியது



பல



சில



உயரம்



குட்டை



ஏறு





இறங்கு



இழு



தள்ளு

## படித்துப்பார்



மகிழுந்தின் **உள்ளே** கண்ணன்
மகிழுந்தின் **வெளியே** ராதா

**மேலே** கிளி
**கீழே** நரி





**சூடான** தேநீர்
**குளிர்ச்சியான** இளநீர்

### பொருத்துக



பழைய

புதிய





முன்னால்

பின்னால்





அருகில்

தொலைவில்



# தெரிந்து கொள்வோம்.

### விலங்குகளின் இளமை பருவப் பெயர்கள்:

| | | |
|---|---|---|
| அணில் | - | அணிற்பிள்ளை |
| கீரி | - | கீரிப்பிள்ளை |
| ஆடு | - | ஆட்டுக்குட்டி |
| குதிரை | - | குதிரைக்குட்டி |
| கழுதை | - | கழுதைக்குட்டி |
| நாய் | - | நாய்க்குட்டி |
| பன்றி | - | பன்றிக்குட்டி |
| பூனை | - | பூனைக்குட்டி |
| எருமை | - | எருமைக்கன்று |
| பசு | - | பசுங்கன்று |
| எலி | - | எலிக்குஞ்சு |
| கோழி | - | கோழிக்குஞ்சு |
| சிங்கம் | - | சிங்கக்குருளை |

### விலங்குகள், பறவைகளின் ஒலிகள்:

அணில் கீச்சிடும்

ஆந்தை அலறும்

எலி கீச்சிடும்

கழுதை கத்தும்

குயில் கூவும்

கோழி கொக்கரிக்கும்

தவளை கத்தும்

நாய் குரைக்கும்

பசு கதறும்

பல்லி சொல்லும்

பாம்பு சீறிடும்

புலி உறுமும்

வானம்பாடி பாடும்

### தாவரங்களின் உறுப்புப் பெயர்கள்:

| | | |
|---|---|---|
| தென்னை | - | தென்னங்கீற்று |
| பனை | - | பனையோலை |
| வாழை | - | வாழையிலை |
| முருங்கை | - | முருங்கைக்கீரை |
| நெல் | - | நெல்தாள் |

### காய்களின் இளமைப் பெயர்கள்:

| | | |
|---|---|---|
| அவரை | - | அவரைப்பிஞ்சு |
| முருங்கை | - | முருங்கைப்பிஞ்சு |
| கத்தரி | - | கத்தரிப்பிஞ்சு |
| வெள்ளரி | - | வெள்ளரிப்பிஞ்சு |
| மாங்காய் | - | மாவடு |

### பறவைகள், விலங்குகளின் தங்குமிடம்:

| | | |
|---|---|---|
| குதிரை | - | குதிரைகொட்டில் |
| கோழி | - | கோழிப்பண்ணை |
| மாடு | - | மாட்டுத் தொழுவம் |
| யானை | - | யானைக்கூடம் |
| வாத்து | - | வாத்துப்பண்ணை |

### செடி, கொடி, மரங்களின் தொகுப்பு:

| | | |
|---|---|---|
| மாமரங்கள் | - | மாந்தோப்பு |
| பனைமரங்கள் | - | பனங்காடு |
| வாழைமரங்கள் | - | வாழைத்தோட்டம் |
| சோளப்பயிர் | - | சோளக்கொல்லை |
| தென்னைமரங்கள் | - | தென்னந்தோப்பு |

# 10. படவிளக்க அகராதி

ம

மடிக்கணினி



கணினியைவிட எடை குறைந்தது.
விரும்பும் இடங்களுக்கு எடுத்துச் செல்லலாம்.
குறைந்த மின் ஆற்றலில் இயங்கும்.

இது நமது தேசிய கனி
மாம்பழத்திலிருந்து பழச்சாறு, பழப்பாகு போன்றவை தயாரிக்கப்படுகின்றன.
மாம்பழம் பலா, வாழையுடன் இணைந்து முக்கனி என்று அழைக்கப்படுகிறது.



மா

மாம்பழம்

மி

மின்தூக்கி



படிக்கட்டுகளில் ஏறுவதை எளிதாக்கும் கருவி.
மின்சாரத்தால் இயங்கும்.
இதன் கதவுகள் திறக்கும்போது விரைவாகவும் மூடும்போது மெதுவாகவும் செயல்படும்.

நீரில் வாழும் உயிரினம்.
நாம் மூக்கினால் சுவாசிப்பதுபோல, மீன்கள் செவுள்களால் சுவாசிக்கும்.
பல வண்ணங்களில், பல வடிவங்களில், பல அளவுகளில் மீன்கள் காணப்படுகின்றன.



மீ

மீன்

மு

முத்து



சிப்பி என்ற நீர்வாழ் உயிரினத்திலிருந்து முத்து உருவாகிறது.
இது விலைமதிப்பு மிக்கது.
அணிகலன்களை அழகுபடுத்தப் பயன்படும்.

புல் வகையைச் சார்ந்தது.
மிகவேகமாக வளரக்கூடியது.
பாண்டா கரடிகள் மூங்கில் இலைகளை விரும்பி உண்ணும்.
மூங்கிலில் கிடைக்கும் ஒருவகை அரிசியில் உணவு தயாரிக்கலாம்.



மூ

மூங்கில்

# படவிளக்க அகராதி

மெ

மெத்தை



மெத்தை என்பது படுக்கப் பயன்படும் மென்மையான பொருளாகும். பொதுவாக கட்டில்களில் பயன்படுத்தப்படுகிறது. பஞ்சு, தேங்காய்நார் இயற்கை பொருட்கள் அல்லது செயற்கை பொருட்களால் உருவாக்கப்படுகிறது. இது நிம்மதியான உறக்கத்தைக் கொடுக்கிறது.

நீர்த்துளிகள் பல சேர்ந்து மேகம் ஆகிறது.
மேகம் குளிர்ந்து மழையாகி மண்ணில் விழுகிறது.
ஒவ்வொரு மேகமும் பல ஆயிரம் லிட்டர் நீரைக்கொண்டது.



மே

மேகம்

மை

மைனா



கூட்டமாக வாழும் பறவை.
பூச்சிகளையும் பழங்களையும் உண்ணும்.
மரப்பொந்துகளில் கூடுகட்டும்.

மலரின் இதழ்கள் விரியும் முன்பு குவிந்து மூடி இருக்கும்.
இதுவே மொட்டு எனப்படும்.
மொட்டின் அமைப்பு மலரின் வகையைப் பொருத்து மாறுபாடும்.



மொ

மொட்டு

மோ

மோதிரம்



இது விரல்களில் அணியும் ஒரு ஆபரணம். பொன்னாலும் நவமணிகளாலும் இது உருவாக்கப்படுகிறது. ஆண் பெண் இருபாலரும் விரல்களில் அணிந்து மகிழ்வர். திருமண பந்தத்தில் இணையவிருக்கும் ஆண் பெண் இருபாலரும் தங்கள் விரல்களில் ஒருவருக்கொருவர் மோதிரம் மாற்றிக்கொள்வர்.

இதன் மற்றொரு பெயர் மரமல்லி.
இதனைப் பன்னீர்ப்பூ எனவும் கூறுவர்.
இதன் காம்பு நீண்டு இருக்கும்.
நறுமணம் மிகுந்தது.



மௌ

மௌவல்

# 11. கொன்றை வேந்தன்

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.**

தாயும் தந்தையும் கண்முன்னே காணும் தெய்வங்கள் ஆவர்.

**ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.**

குறையாத ஆர்வமே முன்னேற்றம் தரும்.

**எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.**

கணக்கும், மொழியும் இரு கண்கள் போன்றவை.

**கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.**

சேமித்த பொருளைவிட கல்வியே உண்மையான செல்வம்.

**தீராக் கோபம் போராய் முடியும்.**

நெடுநாள் கோபம் சிக்கலில் முடியும்.

**நல்லிணக்கம் அல்லது அல்லல்படுத்தும்.**

இணக்கம் இல்லாத நட்பு துன்பம் தரும்.

**நுண்ணிய கருமம் எண்ணித் துணி.**

சிறிய செயலாக இருந்தாலும் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும்.

**பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.**

தீமை தரும் எல்லாவற்றையும் தவிர்க்க வேண்டும்.

**மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.**

அமிழ்தம் போன்ற அரிய உணவையும் பகிர்ந்து உண்ண வேண்டும்.

**முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.**

செயல்களுக்கு ஏற்பவே விளைவுகள் இருக்கும்.

- ஔவையார்

# 12. மொழியோடு விளையாடு

## சொல் விளையாட்டுக்கு....










## குறுக்கெழுத்துப்புதிருக்கு....










## சொல்வளம் பெருக....









# 13. தமிழ்ச்சொல் அறிந்து பயன்படுத்துவோம்

| | | | |
|---|---|---|---|
|  | பள்ளிக்கூடம் | சுவடியகம் |  |
|  | மருத்துவமனை | ஒலிப்பான் |  |
|  | காவல் நிலையம் | ஒலிவாங்கி |  |
|  | பேருந்து நிலையம் | உறிஞ்சுகுழல் |  |
|  | தொடர்வண்டி நிலையம் | இடுப்புப்பட்டி |  |
|  | விமான நிலையம் | கைக்கடிகாரம் |  |
|  | துறைமுகம் | கழிப்பறை |  |
|  | திரையரங்கு | தலைக்கவசம் |  |
|  | ஒளிப்படம் | வாழ்த்து அட்டை |  |
|  | மருந்துக்கடை | செங்கிழங்கு |  |

# 14. வந்த பாதை

## பொருத்தமான இரட்டைச் சொற்களை நிரப்புக

(மெல்ல மெல்ல, துள்ளித் துள்ளி, சலசல, கலகல, கடமுட கடமுட , படபட, சடசட )



கட்டைவண்டி ................................ என்று ஓடுகிறது.

அருவி ................................ என்று கொட்டுகிறது.





மான் ........................................ ஓடுகிறது.

தீபாவளி வெடி ................................ என்று வெடிக்கிறது.





ஆமை ........................................ நடந்து செல்கிறது.

மழை ................................ என்று பொழிகிறது.





சிறுவன் ........................................ என்று சிரிக்கிறான்.

## படத்தைப்பார்!. பொருத்தமான செய்யுள் அடியை எழுதுக.





## மாறியுள்ள எழுத்துகளை சொல்லாக்குக.

| | | | |
|---|---|---|---|
| மை | ற் | வே | று |

| | | | |
|---|---|---|---|
| ழி | ன் | வா | கோ |

| | | | | |
|---|---|---|---|---|
| ன | ம் | ட் | டி | ப |

| | | | |
|---|---|---|---|
| டு | ண் | ம | மே |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நி | வ | கா | ல் | ய | ம் | லை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க | டி | கை | கா | ர | ம் | க் |

படங்களைப் பார். தொடர்புடைய உடல் உறுப்பின் பெயரை எழுதுக.



















# கற்றல் விளைவுகள்

| 1. கேட்டல் | 2. பேசுதல் | 3. படித்தல் | 4. எழுதுதல் | 5. நடைமுறை இலக்கணம் |
|---|---|---|---|---|
| படங்கள், ஓவியங்கள், கதைப்படங்களை நுட்பமாக உற்றுநோக்கியும் சொல்லக்கேட்டும் சுவைப்பர்.<br><br>கேட்டறியாத, எளிய சொற்களமைந்த பாடல்களைக் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர்.<br><br>சிந்தனையைத் தூண்டும் எளிய கதைகளைக் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர்.<br><br>எளிய வாய்மொழி அறிவுரைகளையும் கட்டளைகளையும் வினாக்களையும் கேட்டுப் புரிந்துகொண்டு எதிர்வினையாற்றுவர்.<br><br>பிறர் பேசுவதைப் பொறுப்புடனும் கவனத்துடனும் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர். | ஓசைநயமிக்க பாடல்களைத் தனியாகவும் குழுவாகவும் உரிய ஒலிப்புடன் பாடுவர்.<br><br>படக்கதையைப் பார்த்து நிகழ்வைக் கூறுவர்.<br><br>செய்திகளைத் திரட்டும் பொருட்டு வினா எழுப்புவர்.<br><br>பார்த்தவை, கேட்டவை பற்றிப் பேசுவர்.<br><br>கேட்டும் படித்தும் அறிந்த பாடல்கள், கதைகளிலிருந்து கேட்கப்படும்?எளிய வினாக்களுக்கு முழுமையான சொற்றொடரில் விடை கூறுவர்.<br><br>சொற்கள், தொடர்களை முறையாகவும் சரியாகவும் ஒலிப்பர்.<br><br>கேட்டறிந்த கதைகள், பாடல்களைத் தம் கற்பனையின் அடிப்படையில் கூறுவர். தமக்குரிய நடையில் பேசுவர்.<br><br>கேட்டவற்றுடன் தம் அனுபவங்களைத் தொடர்புபடுத்திப் பொருள் விளங்கும் வகையில் தெளிவாக வெளிப்படுத்துவர். | தமிழ்மொழியின் அனைத்து எழுத்துகளின் ஒலிவடிவ, வரிவடிவத் தொடர்புகளை இனங்கண்டு முறையாக உச்சரிப்பர்.<br><br>வடமொழி ஒலிப்புகளுக்குரிய கிரந்த வரிவடிவங்களை அறிந்து படிப்பர்.<br><br>எளிய சொற்கள், சிறுசிறு தொடர்களை உரிய ஒலிப்புடன் உரக்கப் படிப்பர்.<br><br>எளிய சந்தப் பாடல்களை உரிய ஓசையுடன் படிப்பர். எளிமையான சிறுசிறு படக்கதைகளையும் பாடல்களையும் படிப்பர்.<br><br>படிக்கும் பகுதியின் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளிப்பர்.<br><br>படித்த பகுதியில் கேட்கப்படும் சிறுசிறு வினாக்களுக்கு விடையளிப்பர். | படங்களைப் பார்த்துப் பெயர்கள், சிறுசிறு தொடர்களைத் தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுவர்.<br><br>வடமொழி ஒலிப்புகளுக் - குரிய கிரந்த வரி வடிவங்களை அறிந்து எழுதுவர்.<br><br>சொற்களையும், சிறுசிறு தொடர்களையும் சொல்லக் கேட்டு எழுதுவர்.<br><br>எளிய பாடல்கள், கதைகள், உரைநடைப் பகுதிகளிலிருந்து கேட்கப்படும் வினாக் - களுக்கு முழுமையான தொடர்களில் விடையளிப்பர்.<br><br>சிறுசிறு தொடர்களைத் தம்முடைய நடையில் எழுதுவர்.<br><br>கேட்டவற்றை / படித்த வற்றை / சிந்தித்து உணர்ந்தவற்றைப் படங்களாகவோ, சொற்களாகவோ, தொடர்களாகவோ வெளிப்படுத்துவர். | ஒலி இயைபுச் சொற்களை உருவாக்குவர்<br><br>ஒருமை, பன்மை விகுதிகளை (கள், க்கள், ங்கள் ) அறிந்து பயன்படுத்துவர்.<br><br>பெயர்ச்சொற்கள், பதிலிப் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களை அறிந்து பயன்படுத்துவர். |

| 6. கற்கக் கற்றல் | 7. சொல்லாட்சித் திறன் | 8. படைப்புத் திறன் | 9. விழுமியங்கள் | 10. வாழ்வியல் திறன் |
|---|---|---|---|---|
| படக்கதைகளைப் பார்த்தறிந்து / படித்தறிந்து கதை கூறுவர்.<br><br>பெயர்ப்பலகைகள், அறிவிப்புகளைப் படிப்பர்.<br><br>விரும்பும் நூல்களைத் தேடிப் படிப்பர். | கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.<br><br>பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், பதிலிப் பெயர்ச்சொற்கள்<br><br>வீடு, பள்ளியில் உள்ள பொருள்களின் பெயர்கள்<br><br>குடும்ப உறுப்பினர் பெயர்கள்<br><br>தின்பண்டங்களின் பெயர்கள்<br><br>எளிய வருணனைச் சொற்கள்<br><br>ஆங்கில மாதங்களின் பெயர்கள் | முதல் எழுத்தை மாற்றி வேறு சொற்களை உருவாக்குவர்.<br><br>குறிப்பிட்ட எழுத்தில் தொடங்கும் பல்வேறு சொற்களை எழுதுவர்.<br><br>கொடுக்கப்பட்ட சொல்லிலிருந்து பல்வேறு சொற்களை உருவாக்குவர்.<br><br>முதல் சொல்லின் இறுதி எழுத்தை அடுத்த சொல்லின் முதல் எழுத்தாகக் கொண்டு சொற்களை உருவாக்குவர். | நேரந்தவறாமை<br><br>கூட்டுணர்வு<br><br>விதிகளைப் பின்பற்றுவர்.<br><br>தூய்மை பேணுவர்<br><br>பொருள்களைப் பாதுகாப்பர்<br><br>பிறருக்கு உதவுவர்<br><br>பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுவர். | கீழ்க்காணும் வாழ்வியல் திறன்களைப் பெற்று உரிய நேரங்களில் பயன்படுத்துவர்.<br><br>தன்னை அறியும் திறன்.<br><br>சிக்கல் தீர்க்கும் திறன்.<br><br>முடிவெடுக்கும் திறன்.<br><br>கூர்சிந்தனைத் திறன்.<br><br>படைப்பாக்கச் சிந்தனைத் திறன்.<br><br>சிறந்த தகவல் தொடர்புத் திறன்.<br><br>உறவுகளை இணக்கத்துடன் பேணும் திறன்.<br><br>பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்.<br><br>உணர்வுகளைக் கையாளும் திறன்.<br><br>மன அழுத்தத்தைக் கையாளும் திறன். |